பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

19 08-2025 TUESDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்கும் பணியை வெளியுறவுத்துறை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
- குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில், திரு சுதர்சன் ரெட்டி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- தமிழகத்தில் பள்ளிக்கல்வித்துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- காவிரி ஆற்றில் அதிக அளவு உபரி நீர் வெளியேற்றப்படுவதால் ஒகேனக்கலுக்கு நீர்வரத்து ஒரு லட்சத்து 35 ஆயிரம் கனஅடியை கடந்துள்ளது.
- ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் -

<<<<<<>>>>>

வெளியுறவுத்துறை அதிகாரிகளின் பணி உள்நாட்டு தேவைக்கேற்பவும், இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் வகையிலும் அமைய வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று தம்மை சந்தித்த இந்திய வெளியுறவுப்பணி பயிற்சி அதிகாரிகள் இடையே பேசிய அவர், புதிதாக பணியில் சேரும் அதிகாரிகள் நாட்டின் பண்பட்ட அறிவாற்றல், அமைதி, பன்முகத் தன்மை, அஹிம்சை போன்ற நன்மதிப்புகளின் அடிப்படையில் பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

அதேவேளையில், நாட்டில் உள்ள பல்வேறு தரப்பை சேர்ந்த மக்கள் மற்றும் அனைத்து கலாச்சாரங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, பொருளாதாரத்திலும் வேகமாக வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டிய குடியரசுத் தலைவர், தங்களது செயல்பாடுகள் மூலம் வெளிநாடுகளில் இந்தியாவின் பெருமையை நிலைநாட்ட பாடுபடுமாறும் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>

*குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு சுதர்சன் ரெட்டி போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*புதுதில்லியில் இன்று நடைபெற்ற கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக்கூட்டத்திற்கு பிறகு, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்தார்.*

*திரு சுதர்சன் ரெட்டி வரும் 21-ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய இருப்பதாகவும் திரு கார்கே குறிப்பிட்டார்.*

*<<<<<<>>>>>*

*ஜவுளி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், ஜவுளி மீதான சரக்கு மற்றும் சேவை வரியை சீரமைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு பபித்ரா மார்கரிட்டா தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் இதனை தெரிவித்த அவர், கச்சா பட்டு மற்றும் சணல் இழைக்கு ஜிஎஸ்டி-யிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.*

*பருத்தி மற்றும் கச்சா பட்டுக்கு ஐந்து சதவீத வரி விதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*அரசின் நடவடிக்கைகள் காரணமாக, கடந்த ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான காலத்தில் ஜவுளி ஏற்றுமதி இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு பபித்ரா மார்கரிட்டா தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>*

*மத்திய – மாநில அரசுகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அந்தந்த மாநிலங்களின் முதலாவது அதிகாரப்பூர்வ மொழியில் தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்ள உள்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இந்திய மொழிகள் பிரிவு முயற்சி மேற்கொண்டுள்ளதாக கூறினார்.*

இதற்கென பன்மொழி திறன் வாய்ந்த மென்பொருளை உருவாக்குவதற்கான பணிகள் புனேவில் உள்ள கணினி மேம்பாட்டு மையத்திடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு நித்யானந்த் ராய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பள்ளிக்கல்வித்துறையை மேம்படுத்த மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் பள்ளியில் இடைநிற்றல் ஏழு புள்ளி ஏழு சதவீதமாக குறைந்துள்ளது என்று தெரிவித்தார்.

ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

*(Sound Byte – அன்பில் – 40 Sec. )*

<<<<<<>>>>>

கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் அதிகரித்துள்ளதால் ஒகேனக்கலுக்கு நீர்வரத்து இன்று மாலை ஒரு லட்சத்து 35 ஆயிரம் கனஅடியை கடந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – தருமபுரி தண்டபாணி – 45 Sec.)*

இதனிடையே, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஒரு லட்சம் கனஅடிக்கும் கூடுதலாக இருப்பதை கருத்தில்கொண்டு தற்போது 50 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

தற்போது அணையின் நீர்மட்டம் 118 புள்ளி மூன்று ஏழு அடியாக உள்ளது.

<<<<<<>>>>>

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் - 46 - Sec.)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை கொளத்தூர் தொகுதியில் பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பில் கட்டப்பட்டுவரும் வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட புதிய கட்டிடப்பணிகளை அமைச்சர் திரு சேகர்பாபு இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு கே என் நேரு சென்னையில் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

சென்னை பள்ளிகளில் படித்து பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று கல்வி சுற்றுலா செல்லும் மாணவர்களை மேயர் திருமதி பிரியா வழியனுப்பிவைத்தார்.

<<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் வரும் 22-ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>-

விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தின்போது சுற்றுச்சூழக்கு உகந்த சிலைகளை பயன்படுத்துமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

புதுக்கோட்டையில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஆசிரியர்களுக்கான பயிற்சியை ஆட்சியர் திருமதி அருணா தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

தேனியில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் பாதிப்புகள் குறித்து விளக்கும் வகையில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

நீலகிரி மாவட்டம் உதகையில் வீசிய பலத்த காற்று காரணமாக, மரங்கள் முறிந்து விழுந்ததால், அங்குள்ள படகு இல்லம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அரக்கோணம் பணிமனையில் மேற்கொள்ளவிருந்த பராமரிப்புப் பணிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், தன்பாத் – ஆலப்புழா எக்ஸ்பிரஸ் ரயில் சேவையில் அறிவிக்கப்பட்டிருந்த மாற்றம் ரத்து செய்யப்பட்டு, இந்த ரயில் வழக்கம்போல இயங்கும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் வெண்கலப்பதக்கம் வென்றார்.

கஸகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பத்து மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் குழு பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

<<<<<<>>>>>

Perth-ல் நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஹாக்கிப் போட்டித் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

<<<<<<>>>>>

ஆசிய கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டித்தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியை பிசிசிஐ அறிவித்துள்ளது.

இந்த அணியின் கேப்டனாக சூரியகுமார் யாதவும், துணை கேப்டனாக சுப்மன் கில்லும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எட்டு நாடுகள் பங்கேற்கும் இப்போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அடுத்த மாதம் 9-ஆம் தேதிமுதல், 28-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

<<<<<<>>>>>

பல்கேரியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>